மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : செய்தி நிலையங்களை விரிவுபடுத்தக்கூடிய கருத்துக்களை அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் உள்ள 'ஊராட்சி இல்லம்'

*349 வினா—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரில் கட்டப்பட்டுள்ள 'ஊராட்சி இல்லம்' என்ற கட்டடத்திற்கு மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) மேற்படி ஊராட்சி இல்லத்தின் திறப்புவிழா தமிழ் நாடு ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மூலம் நடைபெற்றதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

	ரூபாய்
(அ) ஊராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது.	1,56,999.50
பேரூராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெற்றது.	9,170.00
மொத்தம்	1,66,169.50

(ஆ) மேற்படி கட்டடம் ஏதாவது ஒரு அதிகாரபற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இயங்குவது நடைமுறைக்கு உதவும் என்பதாலும், வளர்ச்சித் துறையினருக்கும், இந்தக் கட்டடத்திற்கும் தொடர்பு உள்ளதாலும் திறப்பு விழா ஷெ சங்கத்தின் மூலம் நடைபெற்றது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி இல்லத்திற்கு ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் மூலமாக வசூலித்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் இதற்குப் பணம் வசூலிக்கவில்லை. ஊராட்சிகளிடமிருந்துதான் வசூலிக்கப்பட்டது.

திரு. துரை முருகன் : ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் பணம் கொடுத்து இந்த இல்லம் கட்டப்பட்டிருக்கிறது. ஊராட்சிப் பணியாளர்கள் இதற்கென்று பணம் எதுவும் தரவில்லை, அப்படி உதவி எதுவும் இல்லாத நிலையில் ஊராட்சிப் பணியாளர்கள் சங்கத்தினை இத்துடன் ஏன் இணைக்க வேண்டும் ? இதில் ஏதாவது உள்நோக்கம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அதிகாரப் பற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இது இயங்க வேண்டும் என்பதற்காகத்தான், அவர்கள் மூலமாக திறப்பு விழா நடைபெற்றது. ஆனால் இப்போது இதன் நிர்வாகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின்கீழ் தான் இருந்து வருகிறது.

திரு. துரை முத்துசாமி : இதே முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஊராட்சி இல்லங்களை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஊராட்சி மன்றங்களே சேர்ந்து முடிவு செய்ய வேண்டியது.

திரு ப. சந்திரன் : வேலூரில் கட்டப்பட்டுள்ள இந்த இல்லத்தில் போதிய அறைகள் இருந்தும், தொலைபேசி வசதி, குடிநீர் வசதி போன்றவைகள் இல்லை. இந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

கூத்தாநல்லூரில் அங்காடி.

*350 வின—திரு மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் சுமார் 80 ஆயிரம் திட்டத்தில் காய்கறி மார்க்கெட் அமைக்கக் கட்டடம் கட்ட அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) இதற்கு அரசு அனுமதி தேவையில்லை. பேரூராட்சிக்கே அதிகாரம் இருக்கிறது.